# கலைஞரும் நானும்

80

**முத்தமிழறிஞர் கலைஞரிடமிருந்து தமிழ்ப் பால் உண்டு வளர்ந்த குழந்தைகளில் நானும் ஒருவன். அந்த வகையில், தாய்க்கும் மகனுக்குமான உறவு என்பதால், அவரை அவ்வளவு பிடிக்கும் என தனது நினைவுகளைப் பகிர்கிறார் பாடலாசிரியர் விவேகா.**



# "பிடித்த அதிகாரம், சிலப்பதிகாரம்!"

**விவேகா,** கவிஞர்

முத்தமிழறிஞர் கலைஞரை என் சிறு வயதில், எங்கள் ஊர் சாத்தனூர் பேருந்து நிலையம் அருகே ஒரு தெருமுனைக் கூட்டத்தில் பேசும்போது, முதல் முறையாகப் பார்க்கிறேன். "கலைஞர் வாழ்க" – "தானைத் தலைவர் வாழ்க" – "தமிழினத் தலைவர் வாழ்க" எனத் தொண்டர்களின் பெரும் முழக்கங்களுக்கிடையே அவரது, செம்மாந்த உரையைக் கேட்டு கிறங்கிய மாணவனாக இருந்தேன். அந்தத் தங்கத் தமிழைக் கேட்டதிலிருந்து, பெரிய ஈர்ப்பு ஏற்பட்டு, நான் 'கலைஞரின் தீவிர பக்தன்' ஆகிவிட்டேன் என்று சொல்லலாம்.

அதற்குப் பின், நான் கலைஞரை எனது கல்லூரிப் பருவத்தில் நேரில் பார்த்தேன். திருவண்ணாமலை அரசுக் கலைக் கல்லூரியில் இரண்டாமாண்டு மாணவனாக, திராவிடர் கழகத்தைச் சேர்ந்த, அருள்மொழி அக்கா தலைமையிலான 'இளங்கோ இலக்கியக் கழகம்' நடத்திய மாநில அளவிலான பேச்சுப் போட்டியில் வெற்றி பெற்றிருந்தேன். அதன் பரிசளிப்பு விழா, சென்னையில் நடைபெற்றது. அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கலைஞர் அந்த நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்து பரிசுகளை வழங்கினார்.

அக்கா அருள்மொழி அவர்கள், "மாநில அளவில் வென்ற மாணவர்" என என்னை அறிமுகம் செய்து வைக்க, கலைஞர் வாழ்த்தினார். அந்த நிகழ்ச்சியில், அவர் கையால் பரிசு பெற்று, அவர் விரல்களைத் தொட்டு, கை குலுக்கி அவர் வாழ்த்தியது என்னால் மறக்க முடியாது. வலிமையான எழுத்துகளைப் படைத்த, ஆயிரக்கணக்கான ஆளுமைகளை உருவாக்கிய அந்தக் கைகளைத் தொட்டுப் பேசுவதற்கு வாய்ப்பு அமைந்தது. அவரின் வாழ்த்து, என்னை வழிநடத்தும் ஆற்றல் கொண்டது என்பதை அப்போது உணர்ந்தேன்.

### கலைஞருடன் மேடைகளில்...

அவரின் உரைகளை பல மேடைகளில் தூரத்தில் இருந்து கேட்டாலும், அவருடன் மேடை ஏறும் நிகழ்வுகள் அமையும் என நினைத்ததில்லை. ஆனால், காலம் அதை அமைத்துக் கொடுத்தது.

பாடலாசிரியராக எனது தொடக்கக் காலத்தில், இயக்குநர், நடிகர் பார்த்திபன் அவர்களின் 'கிறுக்கல்கள்' நூல் வெளியீட்டு விழா, கலைஞர் தலைமையில் நடைபெற்றது. அந்த நிகழ்வினைத் தொகுத்து வழங்கினேன். கலைஞரைப் பற்றியும், நிகழ்வில் பங்கேற்றவர்களைப் பற்றியும் கவிதையாகவே தொகுத்து வழங்கினேன். அவற்றை ரசித்த கலைஞர், நடிகர் நெப்போலியன் அவர்களிடம் வெகுவாக சிலாகித்துக் கூறியிருக்கிறார். நிகழ்ச்சிக்குப் பின், நெப்போலியன் அவர்கள் இதை என்னிடம் கூறினார். எந்த ஊர், என்ன பின்புலம் என்றும் கேட்டார் என்பதை அறிந்தேன்.

நான் திரைத்துறையில் பாடலாசிரியராக வளர்ந்த பின்னர், கலைஞர் தலைமையில் நடைபெறும் கவியரங்கங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புகள் அமைந்தன.

அண்ணா நூற்றாண்டுக் கொண்டாட்டத்தின் போது, பல இடங்களில் நடைபெற்ற கவியரங்குகளில் கலந்து கொண்டேன். முத்தாய்ப்பாக, நூற்றாண்டு நிறைவு நாள் கவியரங்கம், கவிக்கோ அப்துல்ரகுமான் தலைமையில், காஞ்சிபுரத்தில் நடைபெற்றது. அதற்கு கலைஞர் வருகை தந்தார். எனக்கு அவரோடு மேடையைப் பகிர்ந்து கொள்ளும் முதல் நிகழ்வு அது. எனது கவிதைகளை ரசித்துக் கேட்டவர், நிகழ்ச்சிக்குப் பின் என்னை அழைத்துப் பாராட்டினார். அதன்பின்னர், கலைஞர் தலைமையிலான ஏராளமான கவியரங்குகளில் அவர் முன் கவிதை பாடும் வாய்ப்புகள் அமைந்தன.



### மூன்று மருத்துவர்கள்

வள்ளுவர் கோட்டத்தில் கவிஞர் வாலி அவர்கள் தலைமையில், நடைபெற்ற கவியரங்கத்தில், எனது கவிதையை ரசித்து, வெகுவாகப் பாராட்டினார். தமிழ்நாட்டில் மூன்றே மருத்துவர்கள்தான். பெரியார், அண்ணா, கலைஞர்.

**பெரியார் அக்குபஞ்சர். குத்தி குத்தி, நம்மை குணப்படுத்துவார்.**

**அண்ணா ஆயுர்வேதம். வெல்லம் கலந்து கொடுத்தே வியாதியை நீக்கிவிடுவார்.**

**கலைஞர் மூலிகை வைத்தியர். இலையை நசுக்கித்தான் தமிழனைக் காப்பாற்றி வருகிறார்**

என்கிற வரிகளைக் கேட்டு, குலுங்கி குலுங்கிச் சிரித்து, குதூகலத்துடன் கைதட்டி மகிழ்ந்தார்.

**"காமத்துப்பால் எழுதினான் என்பதற்காக, வள்ளுவனைக் கொண்டுபோய் குமரியில் நிற்க வைத்துவிட்டாயே, நீயல்லவா குறும்புக்காரன்"** என்கிற வரிகளையும் மிகவும் ரசித்து, அழைத்துப் பாராட்டினார். அன்று கலைஞர் தொலைக்காட்சியில், அந்த வரிகளை மட்டும் தொடர்ச்சியாக ஒலிபரப்பியது, எனக்கும் மகிழ்ச்சியாக இருந்தது.

கோவையில், செம்மொழி மாநாட்டின்போது கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் தலைமையில், கவியரங்கம். அங்கும் எனது கவிதைகளின் வரிகளைக் குறிப்பிட்டுப் பாராட்டினார்.

**"நீ எத்தனை முறை**
**அதிகாரத்தில் இருந்தாலும்**
**உனக்குப் பிடித்த அதிகாரம்**
**சிலப்பதிகாரம்"** என்கிற வரிகளைக் குறிப்பிட்டு சிலாகித்தார்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள், கலைஞர் அவர்களின் பிறந்த நாளின்போது 93 கவிஞர்களுடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்த நிகழ்வில், நானும் இடம்பெற்றேன். கவிப்பேரரசு அவர்கள் கலைஞரிடம் என்னைப் பற்றி அறிமுகம் செய்யும்போது, "கவிஞர் விவேகா" எனத் தொடங்கினார். உடனே கலைஞர் "அவரைப் பற்றித் தெரியாதா?, நல்லா தெரியுமே!" என அந்த நிகழ்விலும் என்னைப் பாராட்டினார்.

கவியரங்கங்களில் நான் பாடும் பல தருணங்களில், கலைஞர் அவர்கள் ரசித்துப் பாராட்டுவதும், அருகில் இருப்பவர்களிடம் வரிக்கு வரி சிலாகிப்பதும் நடக்கும். அவர்கள் என்னிடம் கலைஞர் ரசித்தவற்றைச் சொல்வார்கள். இப்படிப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன.

இன்றைய தமிழின் முகத்தை வடிவமைத்தவர் கலைஞர்தான். சமஸ்கிருதம் மேலோங்கி இருந்த நடையை, தூய்மைப்படுத்தி, சுத்திகரித்து, இன்றைக்கு இருக்கிற செந்தமிழாகக் கொடுத்த தலைவராக கலைஞரைச் சொல்லலாம்.

அண்ணாவும், அவருக்குப் பின் கலைஞரும் வந்து மேடைகளில், புதுவிதமாக தமிழை தமிழ்நாடு முழுவதும் கொண்டு சென்றதால்தான், இன்றைக்கு தமிழ், தனது இயல்பினை அடைந்துள்ளது. அதற்கு, கலைஞர்தான் காரணமாக இருந்தார் என்றால் மிகையில்லை.

**இன்றைய தமிழின் முகத்தை வடிவமைத்தவர் கலைஞர்தான். சமஸ்கிருதம் மேலோங்கி இருந்த நடையை, தூய்மைப்படுத்தி, சுத்திகரித்து, இன்றைக்கு இருக்கிற செந்தமிழாகக் கொடுத்த தலைவராக கலைஞரைச் சொல்லலாம்.**

தமிழுக்குப் புது இரத்தம் பாய்ச்சினார் என்பது பேருண்மை. தமிழை அரசியல் படுத்திய மாபெரும் ஆளுமை கலைஞர்தான்.


### நெஞ்சுக்கு நீதி

அவரது 'நெஞ்சுக்கு நீதி' நூலை வாசிப்பது எனக்கு ஊக்கம் தரும். அது அவரது வாழ்க்கை வரலாறு மட்டுமல்ல; நமக்கான தோல்விகளில் இருந்து எப்படி நம்மை மீட்டுக் கொள்வது என்பதற்கான பெரிய திறப்பைக் கொடுக்கும். சோர்வே வராது. எவ்வளவு தடைகளைத் தாண்டி வந்திருக்கிறார். சோதனைகளைச் சந்தித்திருக்கிறார் என்பதை அறிந்தால், நாம் சந்திக்கும் சோதனைகள் எல்லாம் ஒன்றுமே இல்லை, என அறிந்துகொள்ள முடியும். அவரைப் போல உழைப்பதற்கு யாராலும் முடியாது. நம் வாழ்நாளில் ஒரு சகாப்தமாக அவர் இருந்தார்.

அவரைப் பார்த்திருக்கிறோம், அவரைத் தொட்டுப் பேசி இருக்கிறோம். அவர் மேடைகளில் இருந்திருக்கிறோம் என்பதே பெரிய மகிழ்ச்சிதான். அவர் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்தோம் என்பதே எனக்குப் பெருமை.

*....பகிர்வார்கள்*

## வாசிக்கவும் கேட்கவும்...




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டில், அவரின் பன்முக ஆளுமையைப் போற்றும் நூல்கள் நூற்றுக்கணக்கில் வெளியாகியுள்ளன. வேறு எந்தத் தலைவருக்கும் அவர்களின் நினைவுகளை, ஆளுமையைப் பேச, இவ்வளவு நூல்கள் வெளிவந்ததில்லை.

தனிநபர்களும் பதிப்பகங்களும் ஊடக நிறுவனங்களும் மிகுந்த விருப்பத்துடனும் பொருட்செலவுகளுடனும் கலைஞர் நூற்றாண்டைச் சிறப்பிக்கும் வகையில், நூல்களை வெளியிட்டு வருகின்றனர். அந்த வகையில், 'கலைஞர் கடிதங்கள்' நூல்களைப் பதிப்பித்துள்ள சீதை பதிப்பகம், கலைஞரைப் போற்றும் நூறு நூல்களை அறிவித்து, முதற்கட்டமாக 32 நூல்களை வெளியிட்டுள்ளதுடன், அந்த நூல்களின் அறிமுக விழாவினையும் நடத்துகிறது.

திராவிட இயக்க வரலாறுகளைத் தொடர்ச்சியாக எழுதிக் கொண்டிருக்கும் திருவாரூர் அர.திருவிடம், முனைவர் பா.சரவணன் உள்ளிட்ட பலரும் இந்த நூல் வரிசையில் இடம் பெறுகின்றனர்.

28–ஆம் தேதி, ஞாயிறு அன்று சென்னை, தியாகராயர் நகர், சர்.பிட்டி தியாகராயர் அரங்கத்தில், கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா தலைமையில், இந்த நிகழ்வு நடைபெற உள்ளது. சமூகநீதி அரசியல் பயிலும் ஆர்வமுள்ளோர் வாசிக்கவும் கேட்கவும் அழைக்கும் நிகழ்ச்சி இது!

## ஃப்ளாஷ்பேக்





ஜெ.ஜவஹர்

### பதிவுக்கு முன் படம்!

1993-ஆம் ஆண்டு டிசம்பர் 8 அன்று, நான் சென்னை பார் கவுன்சிலில் வழக்கறிஞராகப் பதிவு செய்யும் முன், சென்னை அண்ணா அறிவாலயத்தில் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களிடம் சென்று வாழ்த்துப் பெற்றேன். உடன் அண்ணன் துரைமுருகன், அண்ணன் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் இருந்தனர். அந்த நினைவுகளுடன் கடந்த 30 ஆண்டுகளாக மதுரை மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்டத் துணைச் செயலாளர் ஆகிய பொறுப்புகளை வகித்து, தற்போது தலைமைக் கழகப் பேச்சாளர் என இன்று வரை தொடர்ந்து கழகப் பணியினைத் தொய்வின்றி ஆற்றி வருகிறேன்.

**– ஜெ.ஜவஹர், தலைமைக் கழகப் பேச்சாளர், மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### விழிப்புணர்ச்சியை ஊட்டும் இயக்கம்!

1953-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் கழகத்தின் நான்கு ஆண்டு நடவடிக்கைகள், மும்முனைப் போராட்டத்தின் விளைவுகள் ஆகியவற்றை விளக்கி, 'நம்நாடு' இதழில் கட்டுரை எழுதினார் பேரறிஞர் அண்ணா. 'தி.மு.கழகம் திடீர் போராட்டங்களில் குதித்திடும் அமைப்பு அல்ல. போராட்டத்தைத் தேடி அலையும் நிலையில் உள்ள கழகமும் அல்ல; மக்களிடையே மகத்தான அரசியல் விழிப்புணர்ச்சியை ஊட்டும் இயக்கம். தடியடிகளைத் தாங்கி, தடை உத்தரவுகளைத் தவிடுபொடியாக்கி இருக்கிறோம். கழகம் நடத்தும் ஏடுகள் பெரும் பாறைகளைப் பிளந்தெறியும் சிற்றுளிகள்" என கழகத்தின் பணிகள், போராட்ட அனுபவங்களை அதில் தொகுத்து எழுதினார்.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

552

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131